Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 68/2017 PW-6**

Name : திரு.இளங்கோ
Father / Husband name : ராதாகிருஷ்ணன்
Village : விழுப்புரம்
Age : 65
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.10.2025

A1, A2 appearance dispensed with. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 31.05.2017 அன்று ஓய்வுபெற்றேன். 07.09.2015 அன்று நான் விழுப்புரம் மாவட்டக்குற்றப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று 14 மணியளவில் திருமதி.மங்கை என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 36/2015, U/s. 406,420,465,468,471 IPC ன் படி வழக்கு பதிவு செய்து இதன் அசல் வாதியின் அசல் புகாருடன் இணைத்து கனம் நீதிமனத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசரித்தார்கள். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குற்றம் நடந்த நாள் 06.11.1991 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார் பெற்ற நாள் 07.09.2015 என்றால் சரிதான். சம்பவம் நடந்து சுமார் 24 வருடங்கள் கழித்து புகார்

கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24 வருடங்கள் கழித்து புகார் கொடுத்தபோது காலதாமதம் குறித்து சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் 8 வது காலத்தில் வாதியால் தாமதம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவினை கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் புகாரில் குறிப்பிட்டுள்ளார்கள், நான் குறிப்பிடவில்லை. புகார் கொடுத்தபோது ஆவணம் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு மட்டும் கொடுத்தார்கள்.

2. புகார் காவல் கண்காணிப்பாளருக்கு கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது குற்றப்பிரிவு குறித்து காவல் கண்காணிப்பாளர் சொல்லயுள்ளாரா என்றால் இல்லை, புகாரில் அடிப்படையில் வழக்கு பதிவு செய்ய சொல்லி சொன்னார்கள். 24 வருடங்கள் கழித்து புகார் கொடுத்ததால் முதல் நிலை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. புகாரிலுள்ள விவரங்கள் குறித்து சட்டப்பிரிவுகளை சேர்த்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் போலியாக தயார் செய்ததாக சொல்லப்படும் ஆவணத்தின் அசல் என்னிடம் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. அதனை பார்வையிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. எத்தனை ஆண்டுகள் டிசிபியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் 2 1/2 ஆண்டுகள் இருந்தேன். டிசிபி யூனிட் நேரடியாக காவல் கண்காணிப்பாளரின் பார்வையில் உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கு புகார் வரவேண்டும் என்றால் காவல் கண்காணிப்பாளர் மூலமாகவும், நீதிமன்றம் மூலமாகவும் வரும் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் கொடுப்பதுபோல டிசிபியில் நேரடியாக புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ய முடியாது என்றால்

சரியல்ல, நேரடியாக புகார் கொடுத்தால் உயர்அதிகாரியிடம் சொல்லி வாய்மொழி உத்தரவின்பேரில் வழக்கு பதிவு செய்யலாம். இந்த வழக்கின் புகார் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் பார்வைக்கு சென்றவாறு மேற்குறிப்புகள் இல்லை என்றால் சரிதான், வழக்கு பதிவு செய்த பிறகு நாங்கள் தகவல் கொடுப்போம். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் புகாரை பெற்று எங்களுக்கு அனுப்பியதற்கு ந.க. நெம்பர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. எங்கள் காவல் நிலையத்தில் உள்ள ரிசிவ் ரிஜிஸ்டரில் உள்ள வரிசை எண்ணை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அவ்வாறு குறிப்பிடமாட்டோம். இந்த புகார் யார் மூலமாக எனக்கு வந்தது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, தபால் மூலமாக வந்ததாக சொல்லியுள்ளேன். தபால் மூலமாக வந்ததாக குறிப்பு இல்லை என்றால் மெசென்ஜர் மூலமாக வந்தது. முதல் தகவல் அறிக்கையில் உள்ள குற்றப்பிரிவுகள் சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்கலாம் என்றால் சரியல்ல. டிசிபியில் பெறப்படுகின்ற புகார்களை முதல் நிலை விசாரணை செய்யவேண்டும் என்ற விதி தெரியுமா என்றால் தெரியும். புகார்தாரர் நேரடியாக புகாரை என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. ஆனால் அன்றையதினமே புகாரின் நகலை பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரிதான். அப்போது புகார்தாரரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகாரிலுள்ள மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் எண், தேதி இல்லை என்றால் சரிதான். புகார்தாரர் புதிய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு என உள்ளது, பழைய உத்தரவை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போது ஆவணங்கள் சம்மந்தப்பட்ட வழக்கு என்று தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். அந்த புகாரில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் எதையும் நான் பெற்றுகொள்ளவில்லை என்றால் சரிதான்.

3. புகார் பதிவு செய்த பிறகு மேல்நடவடிக்கை நான் எடுக்கவில்லை என்றால் சரிதான், உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்துவிட்டேன். முதல் தகவல் அறிக்கையில் நிலைய பொறுப்பிலிருந்தபோது புகாரை பெற்று பதிவு செய்ததாக உள்ளது என்றால் சரிதான். புகார் மாவட்ட காவல் கண்காணிப்பாளிடம் கொடுத்து அவரிடமிருந்து எனக்கு வரவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரை வைத்து நேரடியாக புனைப்பட்ட புகார் என்றால் சரியல்ல. புகாரில் ஏற்கனவே புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது அதுகுறித்து நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் செல்வாக்கின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேல்அதிகாரியின் பார்வைக்கு வழக்கு கோப்பை வைக்கும்போது மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவை வைக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் புகாருடன் மேற்படி உத்தரவை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**